# நினைவுகளும் யோசனைகளும். . .(1)

*Praise the Lord:*

*எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து. . . A man ought to examine himself (1 cor. 11:28)*
*நம்மை நாமே நிதானித்து அறிந்தால். .. if we judged(examine) ourselves NIV(NLT) (1 cor. 11:31)*
*நாம் நியாயந்தீர்க்கப்படோம். . .ஆமென்.*

**Let us pray……..**

எபிரெயர்/Hebrews 4:12

தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், **இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது.**

For the word of God is living and active. Sharper than any double-edged sword, it penetrates even to dividing soul and spirit, joints and marrow; **it judges the thoughts and attitudes of the heart.** (NIV)

. .. . It exposes our innermost thoughts and desires. (NLT)

. . . . is a discerner of the thoughts and intents of the heart. (KJV)

*From Dictionary:*

நினைவு: innermost thoughts (mind)

1. மனப்பதிவை வெளிக்கொண்டுவருவது, நினைக்கச்செய்வதாக அமைவது, ஞாபகம் remembrance
2. மனப்பதிவுகளுக்கான இடம் memory
3. மனப்பதிவுகளை உணரும் நிலை thought, mind
4. சுய உணர்வு, பிரக்ஞை consciousness

thought: **சிந்தனாசக்தி, யோசனை, அபிப்ராயம், எண்ணம், தியானம், சிந்தனை ஆலோசித்தல். .**

யோசனை: intents of the heart

1. சிந்தித்து வெளிப்படுத்தும் கருத்து advice, suggestion
2. சிந்தனை thought

Intent: **கருத்து, நோக்கம், ஆவல் நிறைந்த. . .**

*From the web reference:*

- Understanding comes from heart and not from mind. When our mind makes us selfish, heart makes us generous. "See from another's point of view" – is taught by our heart. Mind just takes our points while making decision, Heart touches and feels other heart and makes true decision…..
- But the organs (mind and senses) derive their principle of activity and life from the soul….
- you may think from your mind but smiling and happiness departure from your heart……
- Mind is part of human body, Heart is part of Soul……

example: **இந்த காரியத்தை நினைக்க நினைக்க இருதயமே வெடிப்பதுபோல உள்ளது. .. . . .**
**பயத்தினாலே இருதயம் வேகமாக துடிக்கிறது. .. .**
**இந்த காரியத்தை செய்யலாம் எனத் தோணுகிறது,**
**அதேசமயம் செய்யாதே என்றும் மனம்/இருதயம் அடித்துக் கொள்கிறது.. . ..**

**நினைவும் யோசனைகளும் ஒன்றையொன்று சார்ந்தது. .. . எண்ணம், நினைவு, யோசனை, இருதயம், உள்ளம், ஆத்துமா. . .. இவைகளெல்லாவற்றையும் நீங்கள் ஆழ்ந்து சிந்தித்தால். . .பல நேரங்களிலே குழப்பமாகவும் அதேசமயம் ஆச்சரியமாகவும் இருக்கும்.. . ..**

- *மாம்ச சிந்தை. . .ஆவியின் சிந்தை. .. . மனுஷனுக்கேற்ற சிந்தனை. . தேவனுக்கு ஏற்ற சிந்தனை*
- *உத்தம இருதயம். . .கடின இருதயம். . ஞான இருதயம். . மேட்டிமையான இருதயம். .*
- *மனுஷருடைய இருதயம். . .மிருகங்களுடைய இருதயம். .*
- *கல்லான இருதயம், . . சதையான இருதயம். . . இப்படி இன்னும் வேதத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. ..*

***இப்படி ஒன்றோடு ஒன்றாகவும், ஒன்றுக்கொன்று முரணாகவும் செயல்படுவதை நாம் உணரலாம்.. . .***

***இருதயம் நினைப்பது ஒன்றும் நாம் சொல்வது ஒன்றாகவும் இருக்கலாம். . .***

இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது; (மத் 15:8)

'These people honor me with their lips, but their hearts are far from me.

***இருதயம் நினைப்பதையே நாம் சொல்கிறவர்களாகவும் இருப்போம். .. .***

வாயிலிருந்து புறப்படுகிறவைகள் இருதயத்திலிருந்து புறப்பட்டுவரும்; அவைகளே மனுஷனைத் தீட்டுப்படுத்தும். (மத் 15:18)

But the things that come out of the mouth come from the heart, and these make a man 'unclean.'

இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்.For out of the overflow of the heart the mouth speaks. (Mt 12:34)

*இருதயம் உலக மாயையிலே நிறைந்திருந்தால். . . அதையே வாய் பேசும். . .*
*நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவஅன்பு நம்முடைய இருதயத்திலே ஊற்றப்பட்டிருந்தால். . .அந்த அன்பினாலே நமது வாய் பேசும். . . .*

(ரோமர்/Romans 7:15)

எப்படியெனில், நான் செய்கிறது எனக்கே சம்மதியில்லை; நான் விரும்புகிறதைச் செய்யாமல், நான் வெறுக்கிறதையே செய்கிறேன்.

I do not understand what I do. For what I want to do I do not do, but what I hate I do. (NIV)

***நன்கு சிந்தித்தால், நமது வாழ்க்கையிலே பல நேரங்களிலே இப்படித்தான் நாம் வாழ்கிறோம். . . .***

1. I know this is not good to do, But I still do it. .. .
2. I can realize by my heart this is not OK, But I still do it….
3. I know this is not ok with respect to my surrounding in this world, But still I make myself reason for my action…
4. We taste our food so prescise and make complaint….we know many people do not have even food in this world
5. GM, TTC…..strike….they know many people do not have such benefit… still they have their own judgement for their action
6. Water in waste. . .

*இதுதான் உலகத்தின் சூழ்நிலை. . . உலகத்தார் அல்லாத நாம். .*
*அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் நமது இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படவேண்டும். .*

.இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் நீங்கள் ஆராயத்தொடங்கினால் குழப்பமடைவீர்கள், கலக்கமடைவீர்கள், வாழ்க்கையில் வெறுப்படைவீர்கள். . . .ஆனால் வேதத்தை வாசிக்க, வாசிக்க வசனம் இவைகளை வகையறுத்துக் கொடுத்து உங்களை தெளிவடையச்செய்து தேவனுக்குள் உற்சாகப்படுத்தும். . .. ஆமென்

(பிலிப்பியர்/Philippians 2:13)

ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்.

for it is God who works in you to will and to act according to his good purpose.

***விருப்பத்தையும் செய்கையையும் தேவன் நம்மில். . உண்டாக்குகிறார். . . இப்படியிருக்க. . .***

*நான் விரும்புகிறதைச் செய்யாமல், நான் வெறுக்கிறதையே செய்கிறேன். ஏன் சிந்தியுங்கள்.???*

(ரோமர்/Romans 8:5-6)

அன்றியும் மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்துக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்; ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள். மாம்சசிந்தை மரணம்: ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்.

Those who live according to the sinful nature have their minds set on what that nature desires; but those who live in accordance with the Spirit have their minds set on what the Spirit desires.
The mind of sinful man is death, but the mind controlled by the Spirit is life and peace;

***நீங்கள் நன்றாக நிதானித்து சிந்தித்தால். . .. . . . .***

***இந்த மரணசரீரத்திலிருந்து யார் என்னை விடுதலையாக்குவார்? என்று நாம் ஒவ்வொருவரும் புலம்பவேண்டும். . . ஆனால் பல நேரங்களிலே நாம் அந்த அளவிற்கு நம்மை நாமே நிதானிப்பது இல்லை. . .(ரோமர் 6,7,8 அதிகாரங்களையும். ..8 வது அதிகாரத்திலே எப்படி முடிக்கிறார் என்பதையும் வாசித்துப் பாருங்கள்.)*** *It is really amazing how the word exposes our inner most thoughts….!*

**(நம் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் நம்மை நிதானித்து அறிந்து கொள்ள முயற்சித்தால், மற்றவர்ளை குறை கூறவோ பார்க்கவோ நேரமிருக்காது. .. நம்மை நிதானிக்கவும் கிறிஸ்துவை நோக்கி பார்த்து அவர் கிருபையை பெறவுமே நமக்கு நேரம் இருக்கும். அது ஒன்றே நம்மை இந்த மரணசரீரத்தினீன்று விடுவிக்கும். .. . ஆமென்.)**

***இந்த மாம்சத்தின் ஆளுகையை. . . எப்படி மேற்கொள்ளவது?***

(பிலிப்பியர்/Philippians 2:5)

கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது; (பிலி. 2:5)

Your attitude should be the same as that of Christ Jesus:

**நமக்கு இயேசுவின் சிந்தை மட்டுமே இருந்தால் . . . ..**
**மாம்சசிந்தையை மேற்கொண்டு விடலாம். .**

(ரோமர்/Romans 8:13)
மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்; ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள். *(இப்படித்தான் நாம் சரீரத்தின் செய்கைகளை அழிக்கலாம். . .)*
For if you live according to the sinful nature, you will die; but if by the Spirit you put to death the misdeeds of the body, you will live,

**இந்த வசனத்தை நான் உங்களுக்குச் சொல்லலாம். . . நான் அப்படிச் செய்கிறேனா? நான் சிந்திக்கவேண்டும். . .**

***எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து. . .*** *A man ought to examine himself (1 cor. 11:28)*
***நம்மை நாமே நிதானித்து அறிந்தால். ..*** *if we judged(examine) ourselves NIV(NLT) (1 cor. 11:31)*
***நாம் நியாயந்தீர்க்கப்படோம். . .ஆமென்.***
***இந்த நினைவும் யோசனையும் கிறிஸ்தவுக்குள் வாழும் நம் ஒவ்வொருவருக்கும் இருக்கவேண்டும். ஆமென்.***
மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் என்றார். (1சாமு 16:7)
Man looks at the outward appearance, but the LORD looks at the heart."
***இருதயத்தை பார்க்கிறவர் மட்டுமல்ல, ஆராய்ந்தறிகிறவர்.. . .***
(எரேமியா/Jeremiah 17:10)
கர்த்தராகிய நானே ஒவ்வொருவனுக்கும், அவனவன் வழிகளுக்கும் செய்கைகளின் பலன்களுக்கும் தக்கதைக் கொடுக்கும்படிக்கு, இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சோதித்தறிகிறவருமாயிருக்கிறேன்.
"I the LORD search the heart and examine the mind, to reward a man according to his conduct, according to what his deeds deserve."

I the LORD search the heart, I try the reins,. . .. (KJV)

*(reins: means of control **கடிவாளம், லகான், அடக்கும் சாதனம்**)*

But I, the Lord, search all hearts and examine secret motives. (NLT)

I, the LORD, search the heart, I test the mind, (NKJV)

***இங்கேயும்*** *mind, Heart. . .**இருதயம், உள்ளிந்திரியங்கள். . சிந்தித்துப் பாருங்கள். .***
***இந்த சிந்தனைக்கு ஒரு முடிவேயிருக்காது. . அதேசமயத்தில் நாம் குழம்பித் தவிக்கவில்லை. . . .***
***வசனம் நமது குழப்பத்தை வகையறுத்துக் கொடுக்கும். .. தேவன் அருமையாக ஒரு வழி சொல்கிறார். .***
(மத்தேயு/Matthew 22:37)
உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக. மத்தேயு 22:37
Jesus replied: " 'Love the Lord your God with all your heart and with all your soul and with all your mind.' (NIV)

**மத்**./Matthew 22:37**, மாற்**/Mark 12:30**, லூக்**./Luke 10:27**, உபா**./Deuteronomy 6:5

**இந்த எல்லா வசனங்களையும் வாசித்துப்பார்த்தால். .. .**

முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழுப் பலத்தோடும் உன் முழுச்சிந்தையோடும் . . . . என்ற வார்த்தைகள். .. உள்ளன.
all your heart, all your soul, all your mind, all your strength
(முழுச்சிந்தையோடும், முழு மனதோடும். . . all your mind. (same word))

**இப்படியாக** mind, heart, thinking, soul…..all these are integrated…..

It got both Spirit and flesh, Good and Bad….

We have to think and pickup Good with the help of our LORD….GOD….WORD.

***மீண்டுமாக வாசிப்போம். . ..*** எபிரெயர்/Hebrews 4:12
தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், **இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது.**
For the word of God is living and active. Sharper than any double-edged sword, it penetrates even to dividing soul and spirit, joints and marrow; **it judges the thoughts and attitudes of the heart.** (NIV)

*அதற்கு அடுத்த வசனத்தை வாசிப்போம்*. .. எபிரெயர்/Hebrews 4:13

அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் அவருடைய கண்களுக்குமுன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும். *என்ற பயத்தோடும் பக்தியோடும் கிறிஸ்துவுக்குள் வாழ்வோமாக. .*

Nothing in all creation is hidden from God's sight. Everything is uncovered and laid bare before the eyes of him to whom we must give account.

**இந்த வசனங்கள், ரோமர் 7,8வது அதிகாரம். .. . இன்னும் எவ்வளவு வசனங்கள் இந்த வேதத்திலே உள்ளதோ நான் அறியேன். . . இந்த ஒரு சில வசனங்களே இவ்வளவுக்கு எனது இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளைம் வகையறுக்கிறது என்று சொன்னால். . .நான் மேலும் மேலும் வாசிக்க வாசிக்க. . .. எனக்கு எவ்வளவு கருத்துக்களை நான் தெரிந்து கொள்ளலாம். .. . .**

**இந்த வேதத்தை வாசிக்க, தியானிக்க திறந்தால் மூடமுடியாது. .. .ஆனால் நம் இந்த உலக வாழ்க்கையின் சூழ்நிலைகள் நாம் முடிவைக்கக்கூடிய சூழ்நிலைகளைக் கொடுக்கும்.**

**எனவே நாம் வேதத்தை வாசிக்க நேரம் இல்லாத நேரத்திலும் படித்த வேதத்தை மனதிலே தியானித்து தியானித்து வாழ்ந்தோமானால். .. . .. .நமது வாழ்க்கை எப்படி இருக்கும் சிந்தித்துப் பாருங்கள்.**

**மனதிலே சிந்திப்பதா. . . .இருதயத்திலே சிந்திப்பதா. . .. உள்ளத்திலே சிந்திப்பதா. .. .ஆத்துமாவிலே சிந்திப்பதா. . . ..**

**இவை எல்லாவற்றிலேயும் முழுமையாக கிறிஸ்துவிலே நாம் அன்பு கூர்ந்தால் அந்த தேவஅன்பு நம்மை பரிசுத்தப்படுத்தும். இந்த உலகத்திலிருந்தும், இந்த மாம்சத்திலிருந்தும். விடுவிக்கவும் பரிசுத்தப்படுத்தவும் தேவஅன்பைத் தவிர வேறு எதனாலும் முடியாது. ஆமென்.**

***நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக் கொள்ளுங்கள் என்றும், நீங்கள் என் கற்பனைகளைக் கைக் கொண்டிருந்தால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள். என்றும் வேதம் சொல்கிறது. அப்படி நாம் நிலைத்திருக்க கர்த்தர் கிருபை செய்வாராக. ஆமென்.***

***2 கொரிந்தியர் 6ம் அதிகாரத்தை வாசித்துப் பாருங்கள். . ..***

***அவருடைய குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்கள் என்று வாக்குத்தத்தம் கொடுத்திருக்கிறார். . .***

*அதற்கு முடிவிலே ஒரு வசனம்*. . . **2 கொரிந்தியர்**/2 Corinthians 7:1

இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாயிருக்கிறபடியினால், பிரியமானவர்களே, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்.

*(இதற்கு முன் அதிகாரத்தில் உள்ள வசனங்களை வாசித்துப் பாருங்கள். . .. )*

Since we have these promises, dear friends, let us purify ourselves from everything that contaminates body and spirit, perfecting holiness out of reverence for God.

*(Read the verses in previous chapter too..)*

*we have so much to understand and clean ourself to fit for the life in Christ. . .*

*எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து. . . A man ought to examine himself (1 cor. 11:28)*

*நம்மை நாமே நிதானித்து அறிந்தால். .. if we judged(examine) ourselves NIV(NLT) (1 cor. 11:31)*

*நாம் நியாயந்தீர்க்கப்படோம். . .ஆமென்.*

*இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாக இருக்கிற இந்த ஜீவனுள்ள வசனங்கள் நம் ஒவ்வொருவரையும் ஆட்கொள்ளட்டும். . ஆமென்*